8. அரசினர் சட்டமுன்வடிவுகள் (தொடர்ச்சி)

(ஆ) பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழக திருத்த சட்ட முன்வடிவு *(சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 40/1979) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் வேண்டும்" என மொழிகிறேன்,

இம்மாநிலத்தில் 4-9-78லிருந்து செயல்பட்டு வரும் பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகச் சட்டத்தை செயற்படுத்துவதில் தங்களுக்கு அனுபவபூர்வமாக, எதிர்ப்பட்ட இடையூறுகளைக் களையும் பொருட்டும், அச் சட்டத்தை மேலும் திறம்பட செயலாற்றும் பொருட்டும் அச் சட்டத்தில் செய்யவேண்டிய திருத்தங்களை, சென்னைப் பல்கலைக்கழகம் மற்றும் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகம் ஆகியவற்றின் துணைவேந்தர்கள் சில பரிந்துரைகளுடன் அரசிற்கு அனுப்பிவைத்தனர். இதனை நேரில் விவாதித்தபின் துணைவேந்தர்கள் தெரிவித்தத் திருத்தங்களை ஏற்பதெனவும், மூலச் சட்டத்தின் தொடர்புடைய விதிகளைத் திருத்துவதெனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இத்திருத்தச் சட்ட முன்வடிவில் ஆட்சிக் குழுவில் வேந்தரின் பரிந்துரையின்படி 2 துறைத் தலைவர்கள் அல்லது நெறியாளர்களுக்குப் பதிலாக 3 துறைத் தலைவர்கள் அல்லது நெறியாளர்களை நியமிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது, தவிரவும், அரசின் ஆளுகையில் 4-9-78 வரை இருந்த கிண்டி பொறியியற் கல்லூரிப் பணியாளர்களுக்கு அவர்கள் புதிய பல்கலைக் கழகத்தின்கீழ் பணி புரிய விருப்பம் தெரிவித்தல் பொருட்டு அவர்களுக்கு உரிமை வழங்கவும் சென்னை குரோம்பேட்டை தொழில் நுட்பவியல் நிறுவனத்தின்கீழ் பணிபுரிந்த பணியாளர்களும் சென்னைப் பல்கலைக்கழகத்தின் ஆளுகையின்கீழ் இருந்த கிண்டி அழகப்பா தொழில் நுட்பவியல் நிறுவனத்தில் பணிபுரிந்தோரும், அந்த அந்த கல்வி நிறுவனங்களுக்காகவே பணியிலமர்த்தப் பட்டிருப்பதால் அவர்களை புதிய பல்கலைக்கழகத்தின் பணியாளர்கள் என தெரியப்படுத்தவும் இச்சட்ட முன்வடிவு விழைகிறது. இதற்கென மூலச் சட்டத்தின் பிரிவு 36 முழுமையாகத் திருத்தப்படுகின்றது.

* 1979 ஏப்ரல் 27 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

மேலும், பல்கலைக்கழகத்தின் அங்கங்களின் அமைப்பிலோ அன்றி பல்கலைக்கழகச் சட்டத்தினை அமுல்படுத்துவதிலே ஏற்படும் இடர்பாடுகளைத் தீர்க்கும் பொருட்டு மூன்றாண்டுகள் வரை அரசு உரிய அரசிதழ் வெளியீடு செய்யவும் புதிய விதி 45 சேர்க்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகத்தின் கல்விக் குழுவின் பெருகி வரும் தொழில் நுட்பத் தேவைகளையும், கிராமப்புற தொழில் வளம், தொழில் நுட்பவியல் திறமை ஆகியவைகளுக்கெனவும் மைய-மாநில அரசு பொறியியற் நிறுவனங்களிலிருந்தும் போதிய பிரதிநிதித்துவம் அளிக்கும் முகத்தானும், இன்ன பிற காரணங்களுக்காகவும் மூலச் சட்டத்தில் இணைக்கப்பட்டுள்ள பேராணை 9க்கு போதிய திருத்தங்கள் இச்சட்ட முன்வடிவில் இடம் பெற்றுள்ளன. இறுதியாக பல்கலைக்கழகப் பணியாளர் தேர்வுக்குழுவில் துணைத்தலைவருக்குப் பதிலாக நிறுவனத்தின் தலைவர்களை அங்கத்தினராக நியமிக்கவும் அங்ஙனமே பல்கலைக்கழகப் பேராணை 13-க்குத் திருத்தமும் இச்சட்ட முன்வடிவு கொண்டுள்ளது.

மேற்கூறிய சொற்களுடன் நான் இந்த சட்ட முன்வடிவை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளுமாறும், நிறைவேற்றித்தர வேண்டும் என்றும் மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :- ''தமிழ்நாடு 1979-ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக்கழக (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 40/1979) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவு 2 முதல் 5 முடிய சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன,

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே தமிழ்நாடு 1979-ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவை சட்டமாக நிறைவேற்றித் தர வேண்டும் என மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப் பெற்றது.